*7*

# இயேசு சோதிக்கப்படுதல்

## (4:1-11)

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றிய தேவனின் அறிவிப்பிற்குப் பின் (3:17), சோதிக்கப்படும்படி கிறிஸ்து, வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டார். சோதிக்கப்படுதல் என்பதை அடிக்கடி, ஆவிக்குரிய உயர்ந்த நிலைக்குப்பின் உடனடியாகத் தொடருகிறது.[1] வனாந்தரத்தில் ஏற்பட்ட இந்த சோதனைகள், இயேசு தமது ஊழியத்தைத் தொடங்குகையில் அவரது பண்பை நிரூபிக்க பயன்பட்டன. "தேவனுடைய குமாரனாக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன?" என்ற கேள்விக்கு, இந்த எடுத்துரைப்பு பதில் அளிக்கிறது. உண்மையான குமாரத்துவம் என்பது, தேவனுக்கு உண்மைநிறைந்தவராக இருக்கும்படியும், என்ன விலை செலுத்த நேர்ந்தாலும், எல்லா விஷயங்களிலும் அவருக்குத் தம்மை ஒப்புவிக்கும்படியும் இயேசுவைக் கேட்டுக்கொண்டது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" என்று கூறினார் (எபிரெயர் 5:8).*

*இயேசுவுக்கு நேர்ந்த சோதனைகள் பற்றிய வரலாற்றில் எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்களை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு வழிநடத்திச் செல்லுகையில், மோசேயின் வரலாற்றுடன் பல ஒற்றுமைகள் அடங்கியுள்ளன. இவ்விரு மனிதர்களுமே வனாந்தரத்திற்குள் வழிநடத்திச் செல்லப்பட்டனர் (4:1; யாத்திராகமம் 19:1, 2), இரவும் பகலும் நாற்பது நாட்கள் உபவாசித்திருந்தனர் (4:2; யாத்திராகமம் 34:28; உபாகமம் 9:9), மற்றும் உயர்ந்த மலையின் மீதிருந்து இராஜ்யங்கள் இவர்களுக்குக் காண்பிக்கப் பட்டன (4:8; உபாகமம் 3:27; 34:1-4).[2] இருந்தபோதிலும், இயேசுவுக்கும், நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் ஒரு மாபெரும் தொடர்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள், இயேசு சோதிக்கப்பட்டதற்கும் இஸ்ரவேல் மக்கள் சோதிக்கப்பட்டதற்கும் இடையில் ஒரு தொடர்பைக் கண்டார்.*

> *மத்தேயு சுவிசேஷத்தில் வரிசைமுறையில் கூறப்பட்டுள்ள மூன்று சோதனைகள், இஸ்ரவேல் மக்களால் எதிர்கொள்ளப்பட்ட மூன்று சோதனைகளின் நாள்வரிசைமுறையைப் பிரதிபலிக்கின்றன. "குமாரன்" என்று தேவனால் அழைக்கப்பட்டிருந்த இஸ்ரவேல் மக்கள் (ஓசியா 11:1; காண்க உபாகமம் 8:5), இந்த சோதனைகள் ஒவ்வொன்றிலும் தோல்வியடைந்திருக்கையில், சோதனைக்குத் தீர்மானமான உண்மைத்தன்மையுடன் பதில் அளித்ததன் மூலம் இயேசு, தேவனுடைய குமாரனாக இருப்பதற்கான தமது தகுதியைச் செயல்விளக்கப்படுத்துகிறார்.[3]*

R. T. ஃபிரான்ஸ் அவர்கள், "உண்மையான இஸ்ரவேலர் என்ற வகையில் இயேசுவின் கருத்து, மத்தேயு 2:15ல் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, அது இவ்விடத்தில் தனது முழுச்சொல் விளக்கத்துடன் வருகிறது" என்று மேலும் குறிப்பிட்டார்.[4]

## அறிமுகம் (4:1, 2)

**[1]அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டுபோகப்பட்டார். [2]அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.**

**வசனம் 1.** இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, அந்த நிகழ்வைச் சுற்றி நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து (3:13-17), **இயேசு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்**, அங்கே அவர் சோதிக்கப்படுதலின் சோதனையைச் சகித்தார். மாற்கு, "உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்" என்று எழுதினார் (மாற்கு 1:12). இயேசு, "ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு" என்று லூக்கா எழுதினார் (லூக்கா 4:1).

மத்தேயு சுவிசேஷத்தின் விவரிப்பில் உள்ள "கொண்டுபோகப்பட்டு" என்ற வினைச்சொல், இயேசு யோர்தான் பள்ளத்தாக்கில் இருந்து, வனாந்தரத்தில் இருந்த உயர்ந்த பகுதிக்குச் சென்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இந்த வனாந்தரப் பகுதி எது என்று நாம் மிகச்சரியாக அறியாது இருக்கையில், இது எரிகோவுக்கும் எருசலேமுக்கும் இடையில் உள்ள கரடுமுரடான மலைப்பகுதி என்று பாரம்பரியக் கருத்து நிலவுகிறது. இந்த மலை மிகவும் அடிக்கடி, குவாரன்ட்டேனியா ("நாற்பது") என்ற இடம் எனப் பெயரிடப்படுகிறது. "சோதிக்கப்படுதலின் மலை" என்று உள்ளூரில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இடம், எரிகோவின் மேற்குப் பகுதியில் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது.[5]

இயேசுவானவர், பொல்லாங்கனால் **சோதிக்கப்படும்படி** அவரைப் பரிசுத்த ஆவியானவர் வனாந்தரத்திற்குள் வழிநடத்தினார். சந்தர்ப்பப் பொருளைச் சார்ந்து, இந்த கிரேக்க வினைச்சொல், "சோதனை, பரீட்சை" அல்லது "சோதிக்கப்படுதல்" என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கக்கூடும்.[6] சோதனையைச் செய்த முகவராகப் பிசாசானவன் இருந்தான், மற்றும் இது பொல்லாங்கு செய்யும்படி இயேசு சோதிக்கப்பட்டார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.[7] மக்களைத் தேவன் சோதிக்கையில், பொல்லாங்கு செய்யும்படி அவர்களை அவர் சோதிப்பதில்லை (யாக்கோபு 1:13). மக்களைச் சோதிக்கும்படி அவர் பிசாசானவனை அனுமதிக்கிறார், ஆனால் எப்போதுமே தப்பிக் கொள்வதற்கான ஒரு வழியையும் அவர் அளிக்கிறார் (1 கொரிந்தியர் 10:13).

இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை தேவனுடைய சித்தப்படி நடைபெற்றது. பிசாசுடனான இந்தச் சந்திப்பு, தற்செயலாக நடைபெற்றதல்ல; இது திட்டமிடப்பட்டு கட்டியமைக்கப் பட்டிருந்தது. இயேசுவை எங்கே சந்திக்க முடியும் என்பதைச் சாத்தான் அறிந்திருந்தான், மற்றும் இயேசு தம்மிடத்தில்சாத்தான் எப்படியும் வருவான் என்பதை அறிந்திருந்தார். இயேசு செய்யும்படி தேவன் அவருக்காகத் தேர்ந்துகொண்டிருந்த

ஊழியத்திற்காக, அவர் “எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற” (காண்க எபிரெயர் 4:15) நிலையை நிரூபிக்க, அவர் சோதிக்கப்படுதல் அவசியமாக இருந்தது.[8]

சோதனைக்காரன் இவ்விடத்தில், ‘‘அவதூறு செய்பவன்’’ அல்லது “குற்றம் சாட்டுபவன்’’ என்று அர்த்தப்படுகிற, **“பிசாசானவன்’’** *(diabolos)* என்று குறிப்பிடப்பட்டுள்ளான். 4:10ல் இவனை “சாத்தான்’’ என்று இயேசு அழைத்தார்; மற்றும் யோபு 1:6-11ல், யோபுக்கு எதிராக இந்த “எதிராளி” அல்லது “சாத்தான்’’ என்பவன்தான் குற்றச்சாட்டைக் கொண்டுவந்தான். இவன் “இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் ...” என்று யோவான் கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 12:10). இவன் அசுத்த ஆவிகளின் அதிபதியான பெயல்செபூலாக (அல்லது பெயல்செபூபாக) இருக்கிறான் (மத்தேயு 12:24; மாற்கு 3:22). இவன் சர்ப்பம் (ஆதியாகமம் 3:1-5; 2 கொரிந்தியர் 11:3; வெளிப்படுத்தின விசேஷம் 20:2), “கெர்ச்சிக்கும் சிங்கம்” (1 பேதுரு 5:8) மற்றும் “சிவப்பான பெரிய வலுசர்ப்பம்” (வெளிப்படுத்தின விசேஷம் 12:3) என்பதாகச் சித்தரிக்கப் பட்டுள்ளான். இவன் “ஒளியின் தூதனுடைய’’ வேஷத்தில்கூட தன்னை மறைத்து வரக்கூடும் என்று வேதாகமம் எச்சரிக்கிறது (2 கொரிந்தியர் 11:14). சாத்தானை “உலகத்தின் அதிபதி” என்று இயேசு அழைத்தார் (யோவான் 16:11). இவனை “இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்” (2 கொரிந்தியர் 4:4) மற்றும் “ஆகாயத்து அதிகாரப் பிரபு” (எபேசியர் 2:2) என்று பவுல் குறிப்பிட்டார்.

**வசனம் 2.** சோதனைக்காரனைச் சந்திப்பதற்கு ஆயத்தமாக இயேசு, **இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தார்.** இதை லூக்கா மிகவும் எளிமையாகப் பின்வருமாறு உரைத்தார்: “அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்’’ (லூக்கா 4:2). உபவாசத்தின் இந்தக் காலகட்டம், பழைய ஏற்பாட்டின் மாபெரும் தலைவர்களுக்கு இணையானதாக உள்ளது. மோசே சீனாய் மலையின்மீது நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்பு, நாற்பது பகல்களும் நாற்பது இரவுகளும் உபவாசம் இருந்தார் (யாத்திராகமம் 34:28; உபாகமம் 9:9; 10:10). எலியா, கர்மேல் மலையின்மீது பாகாலின் தீர்க்கதரிசிகளைத் தோல்வியடையச் செய்தபின்னர், யேசபேலின் கோபத்திற்குத் தப்பி ஓடியபோது, இதே கால அளவு உபவாசம் இருந்தார் (1 இராஜாக்கள் 19:8). இந்த விஷயங்கள் ஒவ்வொன்றிலும், ஆவிக்குரிய காரணத்திற்காக உபவாசம் இருக்கப்பட்டது. இயேசு, வரவிருந்த தமது ஊழியத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலும் சோதனைக்காரனைத் தாம் எதிர்கொள்வதற்கு ஆயத்தப்படுதலிலும், இவ்வடிவத்திற்கு உண்மையான வகையில் உபவாசித்தார்.

**அவருக்குப் பசியுண்டாயிற்று** என்பது இயேசுவின் உபவாசத்தினுடைய விளைவாக இருந்தது. பசி என்பது ஒருவரை உடல்ரீதியாக பலவீனமாக்குகிறது, மற்றும் இது ஒருவர் உணவின்மீது தமது கவனத்தைக் குவிக்கவும், ஆவிக்குரிய விஷயங்கள் உட்பட மற்ற அக்கறைக்குரியவற்றை புறக்கணிக்கவும் காரணமாகிறது.[9] இயேசு பசியினால் ஆட்கொள்ளப்பட்டது மட்டுமின்றி, அவர் வனாந்தரத்தின் அபாயங்களுக்கு உட்பட்டவருமானார். இயேசு “அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்’’ என்று மாற்கு விவரித்தார் (மாற்கு 1:13).

## *முதலாம் சோதனை (4:3, 4)*

**[3]அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: "நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான். [4]அவர் பிரதியுத்தரமாக: "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்றார்.**

*__வசனம் 3.__ இயேசு பலவீனமாகவும் பசியாகவும் இருக்கையில், சாத்தான் வந்து சேர்ந்து அவருக்கு எதிர்நின்றான். இவனை __சோதனைக்காரன்__ என்று மத்தேயு சித்தரித்தலானது, இவன் தன்னால் பாதிக்கப்படுபவர்களைத் தீமை செய்யும்படி இணங்கச் செய்தல் என்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தான் என்று கருத்துத் தெரிவிக்கிறது (காண்க 1 கொரிந்தியர் 7:5; 10:13; 1 தெசலோனிக்கேயர் 3:5). குறிப்பிட்ட இந்த வேளையில் சாத்தான் மேற்கொண்டதாக எவ்விதமான உடல்ரீதியான வடிவம் குறித்தும், வேதவசனப் பகுதியில் குறிப்பு எதுவும் தரப்படுவதில்லை.*

*தேவனைத் துதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைத் திரித்துக் கூறுவதன் மூலம் இயேசுவை சாத்தான் தாக்கினான் (காண்க 3:17). அவன், __"நீர் தேவனுடைய குமாரனேயானால் ..."__ என்று கூறினான். சோதனைக்காரன் இயேசுவின் உரிமைகோருதலைத் தாக்கினான். இவ்விடத்தில் கிரேக்க மொழியின் வார்த்தைக் கட்டமைப்பு, "நீர் தேவனுடைய குமாரனாக இருப்பதால், உம்மால் என்ன செய்ய முடியும் என்பதை எனக்கு காண்பியும்" என்பதே சாத்தான் கூறியதன் அர்த்தமாக இருக்கும் என்பதை அனுமதிக்கிறது.*

*இயேசு உடல்ரீதியாக பலவீனமாக இருந்தபோது, சாத்தான் அவரை அணுகினான் (4:2). மக்கள் தங்களின் மிகப்பலவீனமான தருணங்களில் இருக்கும்போது அவர்களைத் தாக்குவதை அவன் நாடுகிறான். இயேசுவின் மிகமுனைப்பான பசியின்மீது கட்டியெழுப்பிய அவன், __"இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்"__ என்று கூறினான். கற்கள் என்பவை வனாந்தரப் பகுதியில் ஏராளமாக இருந்தன (காண்க 3:9), மற்றும் இவற்றில் சில, இயேசுவினால் வழக்கமாக உண்ணப்பட்ட அப்பம் போன்ற வடிவத்தில் இருந்திருக்கலாம் (காண்க 7:9). கற்களை அப்பங்களாக மாற்றுதல் என்பது இயேசு செய்வதற்கு சுலபமானதாக இருந்திருக்கும். பிற்பாடு அவர், தண்ணீரைத் திராட்சரசமாக்கினார் மற்றும் ஒரு சில மீன்களையும் ஒரு கைநிறைய மாத்திரம் இருந்த அப்பத்துண்டுகளையும் கொண்டு திரளான மக்கள் கூட்டத்திற்கு உணவளித்தார் (யோவான் 2:6-11; மத்தேயு 14:13-21; 15:32-38). தேவனுடைய அருளிரக்கங்கள் மீது நம்பிக்கையற்றுப்போக இயேசுவை வழிநடத்தும்படி சாத்தான் நாடினான்.*

*__வசனம் 4.__ இந்த சோதனைகளை எதிர்த்து நிற்க, இயேசு தமது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு மனிதரும் இவற்றைச் சந்திக்கச் செய்ய வேண்டிய - தேவனுடைய வசனத்தைச் சார்ந்திருத்தல் என்ற - அதே வழியில் இவற்றை அவரும் சந்தித்தார். சோதனைகள் ஒவ்வொன்றிற்கும் அவர் செய்தது போன்றே, இந்த சேதானைக்கும் வேதவசனங்களின் வார்த்தைகளைக் கொண்டு பதில் அளித்தார்: __"மனுஷன்__*

**அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே.”** அவரது மேற்கோள், செப்துவஜிந்த் வேதாகமத்தில் உபாகமம் 8:3ல் இருந்து வருகிறது. இவ்வசனப்பகுதி, இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய அருளிரக்கத்தின்மீது சார்ந்திருக்க வேண்டும் (யாத்திராகமம் 16; காண்க சங்கீதம் 78:17-20) என்று அவர் தமது “குமாரனாகிய” இஸ்ரவேலுக்குப் (யாத்திராகமம் 4:22) போதித்ததைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய மக்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்ட பின்னர், அவர்கள் வனாந்தரத்தில் பசியாயிருப்பதை அனுமதித்ததன் மூலம் அவர்களின் விசுவாசத்தை அவர் சோதித்தார். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்களில் சிலர், முறைப்படி அன்றாடம் உணவைத் தாங்கள் கொண்டிருந்த எகிப்துக்குத் திரும்பிப் போக விரும்பினர். அவர்களிடம் விசுவாசக் குறைவு இருந்தாலும், “வானத்திலிருந்து அப்பம்” என்ற மன்னாவை அவர்களுக்கு அனுப்பியதன் மூலம் தேவன் அவர்களைக் கிருபையாய்ப் பராமரித்தார். தேவன் தம்முடைய மக்கள் அவரில் நம்பிக்கை கொண்டிருக்கும்படி போதித்துக் கொண்டிருந்தார்.

பழங்கால இஸ்ரவேல் மக்களைப் போலின்றி, தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசு ஏற்புடைய நம்பிக்கை வைத்தலைச் செயல்விளக்கப் படுத்தினார். அவர் தேவனுக்கு எதிராக முறுமுறுக்கவும் இல்லை அல்லது விஷயங்களைத் தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்ளவும் இல்லை. அவர், ஞானஸ்நானத்தின்போது தமக்கு அருளப்பட்டிருந்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத் தமது சொந்த நோக்கங்களுக்காக வீணாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் மற்றும் அவரது தேவைகளைப் பூர்த்தி செய்வார் என்று அவர் தாழ்மையாக நம்பினார்.

லியோன் மோரீஸ் அவர்கள், “அப்பத்தினால் மாத்திரமல்ல” என்ற சொற்றொடர் “அப்பத்தின் முக்கியத்துவத்தை மறுப்பதில்லை” (பலஸ்தீன நாட்டில் இது ஏறக்குறைய ‘உணவு’ என்பதுடன் ஒரே அர்த்தம் கொண்டதாக இருந்தது), ஆனால் இது அப்பத்தின் [உணவின்] முழுமுதல் முக்கியத்துவம் என்பதை மறுக்கிறது. “உணவினால் மாத்திரம் நிலைநிறுத்தப்படும் ஒரு வாழ்வு மிகவும் வறுமையான வாழ்வாக உள்ளது” என்று மிகச்சரியாக உரைத்தார்.[10] இயேசு, “நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது” என்று கூறினார் (யோவான் 4:34). மற்றும் அவர், தமது சீஷர்கள் (உணவு, பானம், உடை என்ற) பொருள் விஷயங்களைத் துரத்திக் கொண்டிருக்கக் கூடாது, ஆனால் தங்கள் இருதயங்களில் தேவனுடைய இராஜ்யத்திற்கு முதல் இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று போதித்தார் (6:31-33).

## இரண்டாவது சோதனை (4:5-7)

**5அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: 6“நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில்,**

**‘தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்’;**

***'உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது' " என்று சொன்னான்.***

***[7]அதற்கு இயேசு: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே" என்றார்.***

***வசனம் 5.*** *அடுத்ததாகப்* ***பிசாசானவன்*** *இயேசுவை,* ***பரிசுத்த நகரம்*** *என்று குறிப்பிடப்பட்ட (காண்க நெகேமியா 11:1, 18; ஏசாயா 48:2; 52:1; தானியேல் 9:24; வெளிப்படுத்தின விசேஷம் 11:2) எருசலேமுக்குக்கொண்டுவந்தான். தாவீதின் காலத்தில் எருசலேம் இஸ்ரவேல் நாட்டின் தலைநகராயிற்று. அது ஜீவனுள்ள தேவனுக்குப் பரிசுத்த ஆலயத்தை அவரது (தாவீதின்) மகன் சாலொமோன் கட்டிய இடமாயிற்று. ஆகையால் தேவனுடைய பிரசன்னம் அந்த நகரத்தைப் "பரிசுத்தம்" ஆக்கிற்று. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முடிவில் இந்த மொழிநடை, தேவன் தமது மக்களுடன் வாசம்பண்ணப்போகிற இடமான பரலோக நகரமான புதிய எருசலேமுக்கு மாற்றப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 21:2, 10; 22:19).*

*கிறிஸ்து செய்யும்படி அவரே தேர்ந்து கொள்ளாத எதையும் அவரை செய்ய வைப்பதற்குச் சாத்தான் வல்லமை/அதிகாரம் எதையும் கொண்டிருக்கவில்லை. இந்தக் கருத்தில், சாத்தான் அவரைப் பரிசுத்த நகரத்திற்குக்* ***கொண்டுபோய்*** *என்பது (காண்க 4:8), அவன் அவரை அந்த இடத்திற்கு வழிநடத்த மாத்திரமே செய்தான் மற்றும் அவனது வழிநடத்துதலை இயேசு மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார் என்று மாத்திரமே கருத்துத் தெரிவிக்கிறது. பயணத்திற்கான சாதாரண வழிமுறை என்பதைத் தவிர வேறு எதையும் வசனப்பகுதி சுட்டிக்காண்பிப்பது இல்லை.*

*எருசலேம் நகரில் பிசாசானவன்,* ***தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி வைத்தான்,*** *"உப்பரிகை" என்ற சொற்றொடர் "சிறகு" என்று அதிகம் நேர்ப்பொருளில் மொழிபெயர்க்கப்படக் கூடும்; இது உயர்ந்த இடம் ("முனை") அல்லது உச்சநிலை ("விளிம்பு") என்பதைக் குறிப்பிடுகிறது. "தேவாலயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள, hieron என்ற கிரேக்க வார்த்தை பொதுவாக, தேவாலயத்துக் கட்டிட வளாகத்தைக் குறிக்கிறது. இயேசு நின்றிருந்த தேவலாயத்து உச்சியின் மிகச் சரியான இடம் எது என்பது இன்னும் ஒரு திறந்த கேள்வியாகவே நிலைத்துள்ளது. ராபர்ட் H. குண்ரீ அவர்கள், மூன்று சாத்தியக்கூறுகளைப் பட்டியலிட்டார்: (1) தேவாலயத்து உப்பரிகை, (2) தேவாலயத்து நுழைவாயிலின் மேற்கூரை மற்றும் (3) வெளிப்பிரகாரத்தின் (இராஜரீக முற்றம்) தென்கிழக்கு மூலை.[11] மூன்றாவது தெரிவு என்பது மிகநீண்ட விழுதலை, "கிதரோன் பள்ளத்தாக்கில் ஏறக்குறைய இருநூறு அடிகள் கீழே விழுதலை" கொண்டிருக்கும்.[12] இந்த உயரம் பற்றி யோசிப்பஸ் அவர்கள் பின்வருமாறு விவரித்தார்:*

> *[இராஜரீக முற்றம் என்பது] சூரியனுக்குக் கீழே உள்ள வேறு எதைக்காட்டிலும் குறிப்பிடப்படுவதற்கு மிகவும் பாத்திரமானதாக இருக்கிறது; பள்ளதாக்கு மிகவும் ஆழமானதாகவும் அதன் அடிப்பகுதி*

காணப்பட இயலாததாகவும் இருந்தது ... யாரேனும் ஒருவர், கொத்தளத்தில் இருந்து கீழ்நோக்கியோ அல்லது அந்த உயரங்களின் இருபுறங்களிலும் இருந்து கீழ்நோக்கியோ பார்ப்பார் என்றால், அது மயக்கம் ஊட்டுவதாக [தலைசுற்றச் செய்வதாக] இருக்கையில், அவரது பார்வை அதுபோன்ற மிகவும் ஆழமான பகுதியை எட்ட இயலாது.[13]

எருசலேம் தேவாலயத்துடன் தொடர்புடைய வகையில் யூதர்கள் கொண்டிருந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையின் காரணமாக, இயேசுவை சாத்தான் தேவாலயத்து உப்பரிகைக்கு வழிநடத்திச் சென்று இருக்கலாம். பின்னாளைய ரபீத்துவப் பாரம்பரியம் ஒன்று, "மேசியாவாகிய இராஜா. தம்மைத் தாம் வெளிப்படுத்தும்போது, அவர் வந்து தேவாலயத்துக் கூரையின் மீது நிற்பார்" என்று கூறுகிறது.[14] அவரது பிரகாசமான தோற்றம், அவரில் எல்லா இஸ்ரவேல் மக்களும் நம்பிக்கை வைக்கக் காரணமாகும். குன்ரீ அவர்கள், இந்த யூதத்துவ நம்பிக்கையை உணர்ந்தறிந்து, "வனாந்தரம், தெய்வீக அருளிரக்கத்தின் மீது தனிப்பட்ட மரண தண்டனைக்குப் பல செங்குத்தான பாறைகளைக் கொண்டிருந்தன என்பதால், தேவாலயத்தைத் தேர்ந்தெடுத்தல் என்பது, மேசியாத்துவ அடையாளத்தின் வெளியரங்கமான காட்சித்துவத்தை மறைமுகமாக உணர்த்துகிறது"[15] என்று எழுதினார். இயேசு தேவாலய உச்சியில் இருந்து குதித்திருந்தார் என்றால், "சிலுவை தவிர்க்கப் பட்டு இருந்து இருக்கும், கிரீடமானது போராட்டமோ வேதனையோ இன்றியே பெறப்பட்டிருக்கும்" என்று வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள் கூறினார்.[16]

**வசனம் 6.** இயேசு தமது அடையாளத்தை நிரூபிக்கும்படி சாத்தான் வற்புறுத்தினான். "**நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்.**" பிசாசானவன் தனது அறைகூவலை ஆதரிப்பதற்கு உண்மையுள்ளவர்களைக் காப்பாற்றும்படி தேவன் **தமது தூதர்களை** அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்துள்ள வசனப்பகுதியான சங்கீதம் 91:11, 12ஐக் குறிப்பிட்டான்: " '**உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்.**' " மோரீல் அவர்கள், "தூதர்களின் பாதுகாவல் என்பது மிகவும் சாத்தியமற்றதாக இருக்கிற மிகச்சிறிய குறும்பு போன்றதாக இருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறான். இடறுகிற பாதம்கூட இராது!"[17] என்று விளக்கப்படுத்தினார். இவ்வசனத்திலும் லூக்காவின் சுவிசேஷ விபரத்திலும் (லூக்கா 4:10, 11), சாத்தான் வேத வசனத்தை மேற்கோள் காண்பிப்பவனாகச் சித்தரிக்கப் பட்டுள்ளான். அவன் வசனப்பகுதியைச் சரியாக மேற்கோள் காண்பித்தாலும், அதை சந்தர்ப்பப்பொருளில் இருந்து வெளியே எடுத்துவிட்டான்.

**வசனம் 7.** இவ்வசனப்பகுதி மக்களை ஊக்குவிக்கும் அர்த்தம் கொண்டது மற்றும் இது ஒருக்காலும் தேவனைச் சோதித்தலை நோக்கம் கொண்டதில்லை என்று வசனத்தில் இருந்து நிரூபித்தல் மூலமாக, இந்த வசனத்தை அவன் தவறாகப் பயன்படுத்துதலை, **இயேசு** திருத்தினார். அவர் உபாகமத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார்: "**உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே**" (உபாகமம் 6:16). இவ்வசனம், மாசா என்ற இடத்தில் இஸ்ரவேல் மக்கள் தேவனைப் பரீட்சை பார்த்ததைக் குறிக்கிறது, இது யாத்திராகமம் 17:1-7ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வனாந்தரத்தில் ரெவிதீம் என்ற பகுதியில் இஸ்ரவேல் மக்கள் இருந்தபோது, அவர்கள் குடிக்கத் தண்ணீர் கிடையாதிருந்தது. அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து தேவனைப் பரீட்சை பார்த்தனர். அவர்கள், "கர்த்தர் நம் மத்தியில் இருக்கிறாரா இல்லையா?" என்று கேட்டனர். அந்த இடம் "மாசா" ("பரீட்சை") மற்றும் "மேரீபா" ("சச்சரவு") என்று அழைக்கப்பட்டது. உபாகமம் 6:16ஐ மேற்கோள் காண்பித்ததில் இயேசு, தாம் தேவனைப் பரீட்சை பார்க்க மாட்டார் என்று அறிவித்தார். அவர் தமது பிதாவின் மீது நம்பிக்கை வைத்திருந்தார் மற்றும் இஸ்ரவேல் மக்கள் விழுந்து போனது போன்று அவர் விழுந்து போகமாட்டார்.[18]

## மூன்றாவது சோதனை (4:8-10)

**[8]மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து: [9]நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான் [10]அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.**

**வசனம் 8.** தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தின் இராஜாவாக இருப்பதற்காக இயேசு உலகத்திற்கு வந்தார். தேவன் அதை நடைபெறச் செய்ய வேண்டும் என்றால், இயேசு சிலுவையின் வழியே போக வேண்டியிருந்தார். சாத்தான் இந்த மகிமைக்கான ஒரு குறுக்கு வழியை அவருக்கு முன்பாகக் காண்பித்தான்: **பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்தான்.** இந்தக் காட்சி, மோசே நெபோ மலையின்மீது நின்று, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை எல்லாத் திசையிலும் இருந்து கண்ணோக்கியதன் எச்சமாக உள்ளது (உபாகமம் 3:27; 34:1-4). இந்த சந்தர்ப்பப் பொருளில், *kosmos* என்ற வார்த்தை, வேறொரு இடத்தில் செய்வது போன்று (ரோமர் 1:8; 4:13; கொலோசெயர் 1:6) வரையறைக்குட்பட்ட கருத்தில் "உலகம்" என்பதைச் சுட்டிக்காண்பிக்க முடியும்.[19] விஷயம் இப்படி இருந்தால், *kosmos* என்பது பலஸ்தீனத்தை மாத்திரம் குறிப்பிட்டிருக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இதற்கு மறுபுறத்தில் சிலர், பூமி முழுவதிலும் இருந்த "எல்லா இராஜ்யங்களையும்" நேர்ப்பொருளில் இயேசுவும் சாத்தானும் கண்டனர் என்று விவாதிக்க விரும்புவார்கள். இயேசு எல்லா இராஜ்யங்களையும் அல்லது சில இராஜ்யங்களை மாத்திரம் நேர்ப்பொருளில் கண்டாரா அல்லது அவற்றைத் தமது மனதின் கண்ணில் கற்பனை மாத்திரம் செய்துகொண்டாரா என்பது இந்த சோதனையின் கருத்தைப் பொறுத்த மட்டில் சிறிதளவே முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது.

**வசனம் 9.** எல்லா மக்களினங்கள் மீதும் மேசியா ஆளுகை செய்வார் என்று பழைய ஏற்பாடு சுட்டிக்காண்பித்தது (சங்கீதம் 2:6, 8; 72:8-11; தானியேல் 7:14). இருப்பினும், கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மரணம்

ஆகியவற்றிற்குப் பின்னர்தான், உலகளாவிய இந்த ஆளுகை நடைபெறும் (28:18; பிலிப்பியர் 2:8-11). சுருக்கமாகக் கூறினால், குறைந்த பட்ச தடை உள்ள பாதையை மேற்கொள்ளும்படி இயேசுவைச் சாத்தான் சோதித்தான். **"நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று சொன்னான்.**

உலகத்து இராஜ்யங்களையெல்லாம் இயேசுவுக்குக் கொடுக்க சாத்தானால் எவ்வாறு முடியும்? லூக்கா சுவிசேஷத்தின்படி சாத்தான், "இவைகள் [இந்த ஆளுகை யாவையும்] எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்" என்றும் கூறினான் (லூக்கா 4:6). பிசாசின் கூற்று நம்பத் தக்கதாக உள்ளது என்றால், உலகத்தின் மீது அவனுக்கு ஓரளவு அதிகாரத்தைத் தேவன் அனுமதித்திருந்தார் என்பது தெளிவாக உள்ளது. இந்த விளக்கம், "இந்த உலகத்தின் அதிபதி" (யோவான் 16:11) மற்றும் "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" (2 கொரிந்தியர் 4:4) என்ற வகையில் சாத்தான், வரையறைக்குட்பட்ட அதிகாரத்துடன் இருக்கிறான் என்று விவரிக்கும் மற்ற வசனப்பகுதிகளுடன் ஒத்துப்போகிறது.

**வசனம் 10. "அப்பாலே போ சாத்தானே"** என்று கூறியதன் மூலம் **இயேசு** தமது பதிலைத் தொடங்கினார். மத்தேயு சுவிசேஷத்தின் பிற்பகுதியில் பேதுருவிடம் இயேசு, "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே" என்று கூறிய வேளையில் இதே போன்ற சொல்விளக்கம் காணப்படுகிறது (16:23). அந்த வேளையில் பிசாசானவன், இயேசுவைச் சோதிக்கப் போதுருவைப் பயன்படுத்தி, அவர் சிலுவையைத் தவிர்க்கும்படி மீண்டும் ஒருமுறை அவரை இணங்கச் செய்ய நாடினான். இந்த சந்தர்ப்பப் பொருளில், இயேசுவின் பிரசன்னத்தை விட்டு நீங்கிச் செல்லும்படி சாத்தானிடம் அவர் கூறினார்.

மீண்டும் ஒருமுறை இயேசு, வேதவசனத்தைக் கொண்டு சாத்தானுக்குப் பதில் அளித்தார். அவர், செப்துவஜிந்த் வேதாகமத்தில் இருந்து உபாகமம் 6:13ஐ மேற்கோள் காண்பித்தார்: **" 'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக' என்று எழுதியிருக்கிறதே."** ஒவ்வொரு பதிலிலும் இயேசு, உபாகமம் புத்தகத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார். இந்த மேற்கோளின் சந்தர்ப்பப் பொருளில், இஸ்ரவேல் மக்களுக்கு எச்சரிக்கை அடங்கி இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் மக்கள் பிரவேசித்த பின்னர் அவர்கள், தங்களைக் கர்த்தரே தமது உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களின்படி ஆசீர்வதித்திருந்தார் என்பதை மறந்துபோகும்படி சோதிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள், கானானியரின் தெய்வங்களை ஆராதிக்கும்படி (இது சிலவேளைகளில் அரசியல் ஆதாயங்களுக்கானதாக இருக்கலாம்) செல்வாக்குச் செலுத்தப்படுவார்கள். உபாகமம் 6:14, 15, "உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே" என்று கூறுகிறது.

தேவனுடைய மக்களான இஸ்ரவேல் மக்கள், கானானியரின் தெய்வங்களை ஆராதித்ததன் மூலம் மறுபடியும் தவறிப்போயிருக்கையில், தேவனுடைய குமாரனாகிய இயேசு, பிதாவுக்கான தமது அர்ப்பணித்தலில் முற்றிலும்

உண்மையுள்ளவராக இருந்தார். அவர் சாத்தானைத் தாழவிழுந்து வணங்க மறுத்துவிட்டார்.[20] தேவனுக்கு முழுமையான ஒப்புக்கொடுத்தல் என்பதே அரியணைக்கு அவருடைய ஒரே பாதை வழியாக இருந்தது. மோரீஸ் அவர்கள், "ஒருவருக்கே" என்ற வார்த்தையின் மீது கவனத்தைத் தரவழைத்தார். அவர், "ஒருவருக்கே என்பது முக்கியமான வார்த்தையாக உள்ளது. சாத்தானை இயேசு வணங்கினால், அவருக்கு உலகம் முழுவதின் மீதான ஆளுகையை வழங்குவதாகச் சாத்தான் கூறினான், ஆனால் இயேசுவானவர், தேவன் ஒருவரை மாத்திரமே ஆராதித்தார், அப்போது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது (28:18) என்பது, சிந்திக்கத் தகுதியானதாக உள்ளது" என்று எழுதினார்.[21] கிறிஸ்து கிரீடத்தை அணிந்துகொள்ள முடிவதற்கு முன்னர், அவர் சிலுவையைச் சுமக்க வேண்டியிருந்தது. உண்மைத்தன்மைக்கான அவரது உதாரணத்தைப் பின்பற்றுதல் (1 பேதுரு 2:21-25) என்பதே, நாம் "ஜீவகிரீடத்தை" (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) அணிந்துகொள்ளக் கூடுவதற்கான ஒரே வழியாக உள்ளது.

## முடிவுரை (4:11)

**[11]அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான், உடனே தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.**

**வசனம் 11.** மூன்றாவது சோதனையைத் தொடர்ந்து, இயேசுவின் கட்டளைப்படி (4:10), **பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்.** "பிசாசானவன் சோதனையெல்லாம் முடிந்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்" என்று லூக்கா 4:13ம் வசனம் பதிவு செய்துள்ளது. வனாந்தரத்தில் சோதனைகள் என்பவை மாத்திரமே இயேசு அனுபவித்த சோதனைகளாக இருக்கவில்லை. அவர் "எல்லாவிதத்திலும் நம்மைபோல் சோதிக்குப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபிரெயர் 4:15). சிலுவைக்குச் செல்லும் வழி முழுவதிலும் இயேசுவைச் சாத்தான் சோதித்தான். யூதர்களின் கும்பல் ஒன்று, அவரை இராஜாவாகும்படி வற்புறுத்த முயற்சி செய்தபோது (யோவான் 6:15), கூட்டங்கள் அடையாளங்களை நாடியபோது (லூக்கா 11:29), மற்றும் சிலுவையை அவர் தவிர்த்துவிடும்படி அவரது சொந்த சீஷர்களில் ஒருவரே அவரைச் சோதித்தபோது (16:21-23), அவர் சோதிக்கப் பட்டிருக்கலாம். அவர் சிலுவையில் தொங்கிய வேளையில்கூட, "தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா" (27:40) என்று கூவிய கும்பலின் மூலமாகச் சாத்தானுடைய சோதனைகள் கேட்கப்பட முடிந்தது. ஆத்துமாக்களுக்கான தனது தேடுதலில் சாத்தான், தனது இரையைத் தொடர்ந்து பிடிக்கும் காட்டு மிருகம் போல் இருக்கிறான் (1 பேதுரு 5:8).

சாத்தான் சென்றபின்பு, **தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.** எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தூதர்கள் "பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார் (எபிரெயர் 1:14). நிச்சயமாகவே அவர்கள், கெத்செமெனேயில் இயேசு ஊக்கமாக ஜெபித்தபின்பு, ஒரு தூதன் செய்தது போன்றே (லூக்கா 22:43), இங்கு இயேசு சாத்தானால்

சோதிக்கப்பட்ட பின்பு, அவரை ஊக்குவித்தனர்.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## சோதனையின் வேளைகளில் (4:1-11)

ஒருவேளை, இயேசுவுக்கு நேர்ந்த சோதனைகளைப் பற்றி வாசிப்பதில் நாம், சாத்தான், உபவாசித்தல் மற்றும் சோதனைகளின் இயல்பு ஆகியவற்றைப் பற்றிக் கேள்விகளைக் கேட்டிருக்கலாம். மத்தேயு 4:1-11ஐ நாம் படிக்கையில் இவற்றின்மீது நாம் கவனம் செலுத்துவோமாக.

*நமது உண்மையான எதிராளி யார்?* உண்மையிலேயே நமது எதிராளி யார் என்பது பற்றி உணர்வுடன் இருத்தல், நமக்கு முக்கியமானதாக உள்ளது. சாத்தான் வஞ்சிப்பவனாக இருக்கிறான். அவன் ‘‘ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்’’ மற்றும் “பொய்யானும் பொய்யுக்குப் பிதாவுமாயிருக்கிறான்” என்று இயேசு கூறினார் (யோவான் 8:44). ஒருவேளை அவன், சிகப்பு உடையணிந்து கொம்புகளும் வாலும் உடையவனாக, தன்னப் பார்த்து மக்கள் சிரிக்கக் காரணமாகும்படி செய்யும் அதே வேளையில், அவன் தனது பேய்த்தனமான வேலையைச் செய்கிறான் என்பது அவனது மாபெரும் வித்தையாக இருக்கலாம். அவன் பொல்லாங்கை நல்லதாகத் தோன்றும்படி செய்து நம்மை வஞ்சிக்கிறான் (ஏசாயா 5:20). ஆபாச இலக்கியத்தை அவன் “கலை” என்றும் பாவத்தை “நெறிபிறழ்வு” என்றும், விபசாரத்தை “அர்த்தம் நிறைந்த உறவு” என்றும் ஓரினச் சேர்க்கையை “மாற்று வாழ்வு நடை” என்றும், மதுபானம் அருந்துதலை “சமூக நிகழ்வு” என்று அழைக்கிறான். அவன் தனது கபடமான செயல்களைச் செய்வதற்கு மக்களை வேலைக்கு அமர்த்துகிறான். அவனது ஊழியர்கள் ‘‘கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள்’’ என்ற வகையில் தோற்றம் அளிக்கும்படி மாற்றப்படக்கூடும் என்றும் அவர்கள் “ஒளியின் தூதனுடைய வேஷத்தை” தரித்து வரக்கூடும் என்றும் பவுல் எச்சரித்தார் (2 கொரிந்தியர் 11:13, 14). நல்ல பேச்சாளர்கள் “பிசாசுகளின் உபதேசங்களை” (1 தீமோத்தேயு 4:1, 2) பிரசங்கித்தலின் மூலம் பெரும் கூட்டமான மக்களைத் திரட்டலாம். அவர்கள் “மாய்மலத்தில் பொய்களையும்” பாதி சத்தியங்களையும் பேசுகின்றனர். அவர்கள் அன்பையும் ஐக்கியத்தையும் பற்றிப் பேசும் அதேவேளையில் வெறுப்பு மற்றும் பிரிவினை ஆகியவற்றிற்குக் காரணமாக முடியும்.

*உபவாசித்தல் பற்றிய விஷயம் என்ன?* பெரும்பான்மையான கிறிஸ்தவர்களுக்கு, உபவாசம் என்பது புறக்கணிக்கப்பட்ட காரியமாகவும் நடைமுறையாகவும் உள்ளது, இருப்பினும் இது பழைய மற்றும் புதிய என்ற இரண்டு ஏற்பாடுகளிலும், போதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட ஒரு வேதாகமப் பாடக்கருத்தாக உள்ளது. நமது வேத வசனப்பகுதியில் நாம் காணுகிறபடி, இயேசு உபவாசித்தார். அவர் தமது சீஷர்களையும் உபவாசிக்கும்படி ஊக்குவித்தார் (6:16-18; 17:21). தர்சு நகரத்து சவுல் (பவுல்) உபவாசித்தான் (நடபடிகள் 9:9) மற்றும் அவர் சிலவேளைகளில் சுவிசேஷத்தின் நிமித்தம் பசியுற்றிருந்தார் (2 கொரிந்தியர் 6:5; 11:27). உபவாசித்தல் (ஒருவேளை உணவைக் காட்டிலும் அதிகமாக, உடல்ரீதியான நெருக்கமான தொடர்பில் இருந்து விலகியிருத்தலை இது குறிப்பிடலாம்) என்பது கணவர்களும் மனைவிகளும் கடைப்பிடிக்க ஒரு

*நல்ல செயலாக இருக்கும் என்று பவுல் மறைமுகமாக உணர்த்தினார் எனலாம் (1 கொரிந்தியர் 7:5). தொடக்ககால சபையார் முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உபவாசித்தனர் (நடபடிகள் 13:2; 14:23).*

*உபவாசத்தை இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு பொதுவான கடமையாக இணைக்கவில்லை, ஆனால் யூதர்கள் மத்தியில் பொதுவாக இருந்த அந்த வழக்கத்தை முறைப்படுத்தினார் (6:16-18). அவர் தவறான வகையிலான உபவாசத்தைக் கண்டனம் செய்தார், ஆனால் அவர் உபவாசித்தலைக் கண்டனம் பண்ணவில்லை என்பது நிச்சயம். அவர், "நீங்கள் உபவாசம் இருந்தால் ..." என்று கூறவில்லை, ஆனால் மாறாக, "நீங்கள் உபவாசிக்கும்போது" என்றே கூறினார் (6:16; என்னால் வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). தாம் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றபின்பு, தமது சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்றும் அவர் மறைமுகமாக உணர்த்தினார் (9:14, 15; மாற்கு 2:18-20; லூக்கா 5:33-35).*

*உபவாசித்தல் என்பது உபவாசித்தலுக்காக இல்லை; இது மனநிலையின் எண்ணப்போக்கு மற்றும் இருதயத்தின் நிலைப்பாடு ஆகியவற்றைத் தெளிவாக்குகிறது. உபவாசியாது இருத்தலினால் நாம், பல ஆவிக்குரிய பலன்களை இழக்கலாம். கை N. வுட்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *தக்க வகையில் ஈடுபட்டால், உபவாசம் என்பது ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் ஆதாரமூலமாக இருக்கக் கூடும், இது மனவிருப்பத்தை ஒழுங்குபடுத்துதலாகவும், உள்ளான பலத்தையும் ஆற்றலையும் உண்டாக்குகிற ஒரு பயிற்சியாகவும் உள்ளது. நம்மில் பலர் அவ்வப்போது, உலகப்பிரகாரமான விருப்பம் ஒவ்வொன்றையும் மற்றும் மாம்சப்பிரகாரமான பசிவிருப்பத்தையும், நமது இருதயத்தில் இருந்து தீர்மானமாக எடுத்துப்போட்டுவிட்டு, ஜெபத்திலும் உபவாசத்திலும் தேவனுக்கு மிகவும் அண்மையில் நெருங்கி, வாழ்வில் அவரது ஆதரவையும் வழிகாட்டுதலையும் உரிமைகோர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு அனுபவம், நம் யாவரையும் எல்லையற்ற வகையில் பலமானவர்களாகவும், விசுவாசத்தில் செல்வந்தர்களாகவும், கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு மேன்மையான வகையில் தேவையானவற்றைப் பெற்றவர்களாகவும் ஆக்கும்.*[22]

*உபவாசத்தின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பலன்களின் கண்ணோக்கில் அதை நாம் ஆழ்ந்து சிந்திப்பது நலமாக இருக்கும். உபவாசித்தல் என்பது, பின்வருவன போன்ற பல சூழ்நிலைகளில், ஞானமுள்ளதாகவும் பயன் நிறைந்ததாகவும் உள்ளது:*

1. *ஒருவர் சோதிக்கப்பட்டு மற்றும் துன்பத்தினால் பரீட்சிக்கப்பட்டு அல்லது உபத்திரவப் படுத்தப்பட்டு இருக்கும்போது.*
2. *கிறிஸ்தவர் ஒருவர், தமது கிறிஸ்தவ வாழ்வில் அலட்சியப்போக்கு வளருவதாக உணரும்போது.*
3. *சபைக்கு இடர்ப்பாடு வருகிறபோது.*
4. *சபையில் மூப்பர்களை அல்லது உதவிக்காரர்களை அல்லது ஒரு பிரசங்கியாரைத் தேர்ந்து எடுத்தல் போன்ற, முதன்மையான*

பகுதிகள் பற்றிய முடிவுகள் ஏற்படுத்தப்படும்போது.

5. ஒருவர் தமது சொந்த வாழ்வில் முக்கியமான முடிவை மேற்கொள்ளும்போது.

*சாத்தான் நம்மை எவ்வாறு சோதிக்கிறான்?* இயேசு நம்மைப் போன்றே சோதிக்கப்பட்டார் என்று அடிக்கடி சுட்டிக்காண்பிக்கப்படுவது உண்டு. அதாவது, சாத்தான் நம்மீது பயன்படுத்தும் அதே வழிமுறைகளை இயேசுவின் மீதும் பயன்படுத்தினான்: மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை (1 யோவான் 2:16). ஏவாளையும் இவ்வாறே சாத்தான் சோதித்தான். அந்தக் கனி "புசிப்புக்கு நல்லது" என்று அவள் கண்டபோது, முதலில் அவள் மாம்சத்தின் இச்சையினால் சோதிக்கப்பட்டாள். இரண்டாவதாக, அது "பார்வைக்கு இன்பமாக இருந்ததாக" அவள் கண்டாள். கடைசியாக அது, "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத் தக்கதாகவும் இருந்தது" (ஆதியாகமம் 3:6). கற்களை அப்பங்களாக்கும்படி சாத்தான் இயேசுவிடம் கூறியபோது (மத்தேயு 4:3), அவர் மாம்சத்தின் இச்சையினால் சோதிக்கப்பட்டார். தேவாலயத்தின் உச்சியில் இருந்து குதிக்கும்படி கூறப்பட்ட சோதனை ஜீவனத்தின் பெருமைக்கானதாக இருந்தது (4:6). உலகத்து இராஜ்யங்கள் யாவற்றையும் அவருக்குச் சாத்தான் காண்பித்து அவற்றை அவருக்கு அளிப்பதாகக் கூறியபோது, அவர் கண்களின் இச்சை என்ற சோதனைக்கு உட்பட்டார் (4:8). யாக்கோபு, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று எழுதினார் (யாக்கோபு 1:14, 15).

சோதிக்கப்படுதல் என்பது பொதுவான அனுபவமாக உள்ளது (1 கொரிந்தியர் 10:13). சோதனையை நாம் சந்தித்தே ஆக வேண்டும் என்றிருக்கையில், நாம் அதற்கு இணங்கிவிடக் கூடாது. இயேசு செய்தது போன்றே, ஆவியின் பட்டயத்தை (எபேசியர் 6:17) அணிந்தவர்களாக, நாம் சோதனையை எதிர்த்து நிற்க முடியும்.

*தொகுப்புரை.* 4:1-11 பற்றிய படிப்பு, பின்வரும் பாடங்களைக் கருத்தாகத் தெரிவிக்கிறது:

1. நமது மிகப்பெரிய எதிராளியான சாத்தான், உண்மையில் இருப்பவனாகவும் கருணை இல்லாதவனாகவும் இருக்கிறான்.
2. இயேசு உபவாசித்தார் ஆனால் மனிதரால் புகழப்பட வேண்டும் என்பதற்காக உபவாசித்தலைக் கண்டனம் செய்தார்.
3. சோதிக்கப்படுதல் என்பது தன்னில் பாவமாக இருப்பதில்லை.
4. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றின் மூலமாகச் சாத்தான் நம்மைச் சோதிக்கிறான்.
5. நாம் தேவனுடைய சித்தத்தை அறிதலாலும் அதைச் செய்தலாலும் சோதனைகளின் மீது வெற்றிபெறலாம் (4:4, 7, 10).
6. சோதனையின்மீது வெற்றி என்பது இனிய பலன்களைக் கொண்டுவருகிறது (4:11).[23]

## சோதனையை எதிர்த்து நிற்குதல் (4:1-11)

இயேசு சோதிக்கப்பட்டது பற்றிய வரலாறு, (மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா என்ற) மூன்று சுவிசேஷ எழுத்தாளர்களால் குறிப்பிடப் பட்டுள்ளது.[24] சோதனையை நாமும் வெற்றிகொள்ளும்படி, அதை இயேசு தாம் சந்தித்து வெற்றிகொண்டதை, நாம் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பது தெளிவு. இந்த வரலாற்றில் நாம், சோதனை பற்றிய பின்வரும் உண்மைகளைக் கற்கிறோம்:

*இது வாழ்வின் மாபெரும் தருணங்களில் ஒன்றிற்குப் பின்பு வர முடியும்.* இயேசு ஞானஸ்நானம் பெற்ற உடனே, அவர் "பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குகாகக் கொண்டுபோகப்பட்டார்" (4:1). அவ்வாறே, ஆவிக்குரிய மன எழுச்சிக்குரிய நமது வேளைகளும்கூட பரீட்சை மற்றும் சோதிக்கப்படுதல் ஆகியவற்றின் இருளான காலகட்டங்களினால் அடிக்கடி பின்தொடரப்படுகின்றன.

*இது பகுத்தறிவுச் சிந்தனை என்ற வகையில் அடிக்கடி தன்னை மறைத்துக்கொள்கிறது* (4:3-10). இயேசு தமது சூழ்நிலையைப் பகுத்தறியும்படியும் குறைந்தபட்சத் தடையுள்ள பாதையை மேற்கொள்ளும்படியும் செய்யச்சாத்தான் முயற்சித்தான். நாம் பகுத்தறியும்போது, நாம் செய்யக் கூடாத சிலவற்றைச் செய்வதற்கு நமக்கு நாமே சாக்குப்போக்குக் கூற முயற்சி செய்கிறோம்.

*இது பேய்த்தனமான இயல்பைக் கொண்டுள்ளது.* வல்லமை அல்லது சந்தோஷம் என்பதற்காக நமது விருப்பத்தின் மூலமாகச் சாத்தான் நம்மைக் கவர்ந்து மயக்கலாம்.

*இதை நாம் தோற்கடிக்க வேண்டும் என்றால், இது முகம் முகமாகச் சந்திக்கப்பட வேண்டும்.* இயேசு தமக்கு ஏற்பட்டசோதனைகளைத் தேவனுடைய வசனத்தைக் கொண்டு தைரியமாகச் சந்தித்தார். கடைசியில் சாத்தான் "சோதனையெல்லாம் முடிந்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்" (லூக்கா 4:13). யாக்கோபு, "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று எழுதினான் (யாக்கோபு 4:7).

## இயேசு சோதிக்கப்பட முடிந்ததா? (4:1-11)

பாவம் செய்யும்படி இயேசு சோதிக்கப்பட முடிந்ததா இல்லையா என்பது, பதில் அளிக்கச் சுலபமான கேள்வியாக இருப்பதில்லை. சம அளவு கல்வித்தகுதி உள்ள மனிதர்கள், இந்த விஷயத்தில் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபடுகின்றனர். பாவம் செய்யும்படி இயேசு சோதிக்கப்பட முடிந்திருக்கும் என்ற கருத்தை மறுப்பவர்களில் பெரும்பான்மையானோர், "சோதிக்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை, "பரீட்சிக்கப்படுதல்" அல்லது "பரிசோதிக்கப்படுதல்" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும் என்ற கருத்தைச் சுட்டிக்காண்பித்துப் பதில் அளிக்கின்றனர்.

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்படும், பாவமில்லாதவராயிருக்கிறார்" என்று

கூறினார் (எபிரெயர் 4:15). அவர் பாவம் செய்திருக்க முடியும், ஆனால் பாவம் செய்யவில்லை என்று இந்தக் கூற்று மறைமுகமாக உணர்த்துகிறது. அவர் பாவம் செய்திருக்க முடியாது என்றால் அவர், பாவம் செய்யவில்லை என்ற உண்மை, எதையாவது அர்த்தப்படுத்த வேண்டியது ஏன் அவசியமாயிருக்கிறது? இணங்கிச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாத இடத்தில் பாவம் செய்வதற்கான சோதனை எதுவும் இருக்க முடியாது. H. லியோ போல்ஸ் அவர்கள், இயேசுவுக்கு ஏற்பட்ட "சோதனைகள் அவரது ஞானஸ்நானத்தைப் போன்றே *உண்மையானவையாக* இருந்தன" என்று எழுதினார்.[25]

கிறிஸ்துவின் இயல்பை நாம் புரிந்துகொள்ளும்போது, இந்தப் பிரச்சனை தீர்க்கப்படலாம். இந்த உலகத்தில் வாழ்ந்த எந்த மனிதரில் இருந்தும் இயேசு வேறுபட்டிருந்தார். அவர் தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் ஒன்றிணைத்தார்: தேவனுடைய குமாரன் மற்றும் மனுஷ குமாரன். நம்மைப் போலின்றி, அவர் தெய்வீகம் மற்றும் மனுஷீகம் என்ற இரட்டை இயல்பைக் கொண்டிருந்தார். இது இவ்வாறு இல்லாதிருந்தால், அவர் சிலுவையில் மரித்திருக்க முடியாது. தெய்வீகத்துவம் மரிக்க இயலுமா? இயேசு மரித்தார்; அவர் தமது மனித இயல்பை விட்டுக்கொடுத்தார் (காண்க யோவான் 10:17, 18; லூக்கா 23:46). நாம் செய்வது போன்றே இயேசுவும், நமது மனித இயல்பு மற்றும் மனவிருப்பம் ஆகியவற்றுடன் மாத்திரம், சோதனையை எதிர்கொண்டார்.

## கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட சோதனைகள் (4:1-11)

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது, பரலோகத்தில் இருந்து வந்த சத்தம், கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தை அறிவித்திருந்தது. பிதாவானவர், "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறினார் (3:17). இதற்குப் பின்பு உடனடியாக, ஆவியானவரால் இயேசு வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டார், அங்கு அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டார். சோதனை ஒவ்வொன்றைச் சந்திக்கும்போது இயேசு, தாம் தேவனுக்கு உண்மையுள்ள மகனாக இருப்பதை நிரூபித்தார். இதன் விளைவாக, அவர் சிலுவைக்குச் செல்லும் தமது வழியில் தம்மைப் பிசாசானவன் தடுக்க அனுமதிக்கவில்லை, அங்கு [சிலுவையில்] தான் அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி உலகத்தின் மீட்பராக இருந்தார்.

முதல் பார்வையில், இயேசுவுக்கு நேர்ந்த சோதனைகள், நமது சொந்த அனுபவத்திற்கு அந்நியமானதாகக் காணப்படலாம். கற்களை அப்பமாக்கும் வல்லமை நம்மிடம் இல்லை, மற்றும் நாம், ஒரு உயரமான கட்டிடத்தில் இருந்து குதிக்கவோ அல்லது சாத்தானை ஆராதிக்கவோ விரும்புவதில்லை. இருப்பினும், இங்கு குறிப்பிடப் பட்டுள்ளபடி, "தேவனைவிடக் குறைவாக தேவனை நடத்துதலுக்கான சோதனை என்பது, இயேசு நம்முடன் பகிர்ந்து கொண்ட சோதனையாக, அடிப்படையில், கீழாக இருக்கிறது."[26] நிச்சயமாகவே நாம் யாவரும் நமது வாழ்வில் இந்த போராட்டத்தை அடையாளப்படுத்த முடியும்.

இருந்தபோதிலும், இயேசுவுக்கு நேர்ந்த சோதனைகளை நாம் அதிகம் நெருக்கமாகக் கண்ணோக்கினால், நமது சொந்த சூழ்நிலைக்கு இணைவுகளைக் கண்டறிய முடியும். (1) இயேசுவின் பலவீனமான மற்றும் பசியான வேளையில் அவரை சாத்தான் அணுகி, சட்டப்பூர்வமான விருப்பத்தைச் சட்டப்பூர்வமான வழியில் திருப்திப்படுத்திக் கொள்ளுமாறு அவரைச் சோதித்தான் (4:3). சாத்தான்

- நம்மை, களவு செய்யும்படி, வேசித்தனம் பண்ணும்படி அல்லது மற்ற குற்றங்களைச் செய்யும்படி சோதிப்பதன் மூலம் - இதே வியூகத்தைத் தொடர்ந்து பயன்படுத்துகிறான். (2) இயேசு தமது அடையாளத்தை நிரூபிக்கும்படி அவரை சாத்தான் சோதித்தான் (4:5, 6). அவன் இன்னமும் இன்றைய நாட்களில் நமது மேட்டிமை உணர்விற்கு வேண்டுகோள் விடுத்து, புண்படுத்துதல் நிறைந்த விஷயங்களைக் கூறுதல் மூலம் அல்லது முட்டாள்தனமான சாதனைகளை முயற்சி செய்தல் மூலம் மற்றவர்களைவிட நாம் உயர்வானவர்கள் என்று நிரூபிக்கும்படி நம்மைச் சோதிக்கிறான். (3) சுலபமான வழியை மேற்கொள்ளும்படி - சிலுவையின்றியே கிரீடத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி - இயேசுவை சாத்தான் சோதித்தான் (4:8, 9). அவன் இன்னமும் நம்மை, நமது ஒழுக்க நெறிகளில் உடன்பாடு காணும்படி, குறைவான எதிர்ப்பு உள்ள பாதையை மேற்கொள்ளும்படிச் சோதிக்கிறான். அது ஒரு தேர்வில் ஏமாற்றுதலாகவோ, ஒரு "வெள்ளைப் பொய்யை" கூறுதலாகவோ அல்லது சில கடமைகளை நிறைவேற்றாது இருப்பதாகவோ இருக்கலாம்.

இயேசுவைப் போன்று நாம், தேவனுக்கு உண்மை நிறைந்த பிள்ளைகளாக இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளோம் (காண்க கலாத்தியர் 3:26-29). கிறிஸ்துவைப் போலின்றி நாம் அடிக்கடி, நாம் எதிர்கொள்ளும் சோதனைகளில் தோல்வியடைந்து போய்விடுகிறோம். அதிர்ஷ்டவசமாக, "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடிய" பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார், ஏனெனில் அவர் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டு" இருக்கிறார். அவர் "பாவமில்லாதவராயிருக்கிற" காரணத்தினால், நமது சார்பாகப் பிதாவின் பிரசன்னத்தில் பிரவேசிக்கத் தகுதி பெற்றவராக இருக்கிறார் (எபிரெயர் 4:14-16).

டேவிட் ஸ்டுவர்ட்

## அமைதி மற்றும் தனிமை ஆகியவற்றின் ஒழுக்கங்கள் (4:1-11)

கூச்சல் மிகுந்த, அவசரமான ஒரு உலகத்தில் நாம் வாழ்வதால், அமைதியின் ஒழுக்கத்தை மேம்படுத்திக் கொள்வது அவசியமாக உள்ளது. சிலவேளைகளில் நாம், நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் இருந்து வேண்டுமென்றே பின்சென்று, மக்கள் பேசிக்கொண்டிராத, தொலைக்காட்சி, வானொலி, குறுந்தகடு இசைப்பான் அல்லது அலைபேசி இராத இடத்திற்குச் செல்ல வேண்டும் இந்தத் தொழில் நுட்பங்கள் இல்லாதபோது நாம் எவ்வாறு வாழ்ந்தோம்?

தனிமையின் ஒழுக்கத்தை நாம் நடைமுறைப் படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஒரு "மூடிய அறைக்குள்" சென்று, இடையூறுகள் எதுவும் இன்றி, ஆவிக்குரிய விஷயங்கள் பற்றிய தியானம் மற்றும் ஜெபம் ஆகியவற்றில் சிலநேரங்களைச் செலவிட வேண்டும்.

இந்த ஒழுக்கங்களை நாம் நடைமுறைப் படுத்த வேண்டியது ஏன்? இங்கு சில காரணங்கள் தரப்படுகின்றன:

1. இயேசுவினால் முன் அமைக்கப்பட்ட உதாரணங்களை நாம் பின்பற்றுவோம் (4:1; மாற்கு 1:35; லூக்கா 4:42).
2. தேவனிடத்தில் நாம் கிட்டிச் சேர்வோம் (சங்கீதம் 46:10; யாக்கோபு

*4:7, 8).*

3. *மனரீதியாக, உடல்ரீதியாக, ஆவிக்குரிய வகையில் மற்றும் உணர்வுரீதியாக, நாம் பெலப்படுத்தப்படுவோம் (லூக்கா 2:52).*
4. *நமது வாழ்விற்குத் தேவனுடைய சித்தத்தைக் கண்டறிவதில் நாம் நேரத்தைச் செலவிடுவோம்.*
5. *அறியாதவற்றை எதிர்கொள்ளக் கூடுவதில் நாம் சிறந்தவர்கள் ஆவோம்.*

---

*குறிப்புகள்*

[1]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 28. [2]Graham H. Twelftree, "Temptation of Jesus," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 824-25. [3]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 24. [4]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 97. [5]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 67. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 793. [7]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew 1-7* (Chicago: Moody Press, 1985), 87. [8]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 96. [9]*வலிவான பசியானது, பகுத்தறிவற்ற பல செயல்களைச் செய்யும்படி மக்களை வழிநடத்தி உள்ளது. சமாரியாவில் முற்றுகையிடப் பட்டதால் ஏற்பட்ட பஞ்சத்தின்போது, ஒருவர் தமது சொந்தக் குழந்தையை உண்ணுதல் என்பது அதிர்ச்சியூட்டும் மற்றும் இயல்புக்கு மாறான விவரிப்பாக உள்ளது (2 இராஜாக்கள் 6:28, 29).* [10]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 74.

[11]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 56. [12]Lewis, 69. [13]Josephus *Antiquities* 15.11.5. [14]*Pesiqta Rabbati* 36; quoted in Twelftree, 823. [15]Gundry, 56. [16]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 230. [17]Morris, 76. [18]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 67. [19]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark*, ed. Robert Frew (Philadelphia: N.p., 1832; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 35. [20]Jack P. Lewis wrote, "Worship of men (Acts 10:26) and of angels (Rev. 19:10) is forbidden; how much more that of the devil!" (Lewis, 70.)

[21]Morris, 78. [22]Guy N. Woods, "Questions and Answers," *Gospel Advocate* (17 June 1982): 358. [23]*தொகுப்புரையில் உள்ள இந்தப் பட்டியல்,* Jack Wilhelm, "Lessons from the Temptation of Jesus," *RSVP Newsletter* 154-10-83-37 (1983). Used by Permission of Jack Wilhelm, P.O. Box 2222, Florence, AL 35630 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது.* [24]*இயேசு சோதிக்கப்பட்டது பற்றிய மற்ற விபரங்கள் மாற்கு 1:12, 13 மற்றும் லூக்கா 4:1-13 ஆகிய வசனப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.* [25]Boles, 95. [26]Hare, 26.